ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/4 - 2012 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2012.12.31

*1791/4 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம்*

*31 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*அரசிலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (1அ) உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகிறேன்.*

*அ. மீள் காப்புறுதியாளரால் செய்து கொள்ளப்பட்ட நீண்ட தவணை மீள் காப்புறுதி ஒப்பந்தம் புறநீங்கலாக, 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையுடன் மீள் காப்புறுதி செய்யுமாறு தேவைப்படுத்தப்பட வேண்டிய காப்புறுதியாளரின் ஒவ்வொரு பொது மீள் காப்புறுதியிலும் நின்றெழுகின்ற மொத்தப் பொறுப்புடைமையின் மீது அத்தகைய காப்புறுதியாளரால் செலுத்தப்படற்பாலதான சதவீதம் முப்பது சதவீதமாக மாற்றப்படுகின்றது ;*

*ஆ. 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2007.12.19 ஆந் திகதிய 1528/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இல்லாதாக்கப்படுகின்றது ;*

*இ. இக்கட்டளை 2013.01.01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, திசெம்பர் 31.*

*2- 117*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*